நாம் மண்ணுலகிற்கு உப்பாகவும் உலகிற்கு ஒளியாகவும் இருக்கவேண்டும் என்று இயேசு கூறுவதன் மூலம் எசாயாவின் இறைவாக்கிற்கு ஒரு பொருளையும் நோக்கத்தையும் தருகிறார். அவரில் நம் அடையாளத்தை அறிவிக்கிறார். அவர் வழியாக நாம் பிரகாசிக்கும் ஒளியை மறைக்கமுடியாது. அது மலைமீது காணப்படும் ஒரு நகரைப் போல் காணப்படும். எசாயா இறைவாக்கினர் கூறுவதுபோல் நாம் செய்யும் நன்மை இந்த ஒளியைப் போல் பிரகாசிக்கும். இவை அனைத்தின் இறுதி நோக்கம் என்ன? அது நம்முடைய விண்ணகத் தந்தையை மாட்சிப்படுத்துவதாகும்.

உள்ளடக்கத்தன்மையை வளர்ப்பதற்கும் உறவுகளை வலுப்படுத்துவதற்கும் உழைப்பதில் இந்த வாசகங்கள் நமக்கு எவ்வாறு சவால் விடுக்கின்றன?

உண்மையிலேயெ, ‘உப்பாக’ இருக்கும் ஒரு திருஅவை ஒவ்வொருமனிதனின் மாண்பையும் பாதுகாக்க செயல்படுகிறது. இதில் யாரும் மறக்கப்படுவதில்லை என்பதை உறுதிசெய்கிறது. ஒவ்வொரு உறுப்பினருக்கும் **ஒவ்வொருவரின் ஒத்துழைப்பு உள்ளது. உண்மையிலேயே ‘ஒளியாக’ இருக்கும் திருஅவை அதன் விளக்கை மரக்காலின் கீழ்வைக்காது. உள்நோக்கிய திருஅவை உறுப்பினர்களை மட்டுமல்லாமல்** முதல் வாசகத்தில் எசாயா கண்ட காட்சியின் படைப்புகளில் ஈடுபடும் தூதுரைப்பணியின் வெளியேயும் நோக்கியதாக இருக்கும். சுருங்கக்கூறின், திருஅவையின் உறுப்பினராக இருப்பது என்பது ஒரு நபர் ஒற்றுமையின் பாலங்களைக் கட்டுவதற்கு ஆற்றலை இணைக்கும் நபராக இருக்கவேண்டும். பின்னர் அவர்கள் ஒவ்வொரு உறுப்பினருடனும் அன்பின் பகிரப்பட்டப் பணியில் கிறிஸ்துவின் உடலைக் கட்டியெழுப்புகிறார்கள்.

உடலின் ஒவ்வொரு உறுப்பினரும் கிறிஸ்துவின் மறையுண்மையை வார்த்தைகளிலும் ஞானத்திலும் மட்டுமல்ல, கிறிஸ்துவின் உடலை எவ்வாறு ஆற்றலோடு கட்டியெழுப்பி மறைபொருளை எடுத்துரைப்பது என்று புனித பவுல் கூறுகிறார். சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைத் தவிர வேறெதைப்பற்றியும் நாம் அறிந்திருக்கத் தேவையில்லை என்று தீர்மானமாகக் கூறுகிறார்.

மனித ஞானத்தினால் அல்ல, மாறாக, தூய ஆவி மற்றும் கடவுளின் வல்லமையின் வெளிப்பாட்டுடன் நமது நம்பிக்கை இருக்கவேண்டும்.

கடவுளின் அன்புதான் நம்மை இணைக்கிறது. அவருடைய ஒளிதான் நாம் காணும்படி செய்கிறது. நாம் அவருடைய உடலைக் கட்டியெழுப்ப நம்மை அர்ப்பணிக்கும்போது, அது உள்ளடக்கிய மற்றும் உறவுகளைக் கட்டியெழுப்பும் ஒரு பயணமாகும். ஒரு நீதிமான் நேர்மையாளர்களுக்கு இருளில் ஒளிரும் வெளிச்சமாக இருக்கிறான். உடலின் ஒவ்வொரு உறுப்பும் மிகவும் முக்கியம்.

**இன்றைய இறைவார்த்தை:**
எசாயா 58: 7-10
திருப்பாடல் 112: 4-9
1 கொரிந்தியர் 2:1-5
மத்தேயு 5: 13-16

புதிய தூதுரைப்பணியின் தேவைகளுக்குப் பதிலளிப்பது, மக்களின் இயக்கம், வாழ்க்கை வீரவடையும் இடம் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துகொள்ளும் புதிய வடிவிலான மேய்ப்புப்பணி நடவடிக்கைகளுக்கு இடமளிப்பதைக் குறிக்கிறது.
இறுதி ஆவணம் எண்:117

INTERNAL CIRCULATION ONLY
BUL 06/2026

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org

# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் ஆண்டின் 5 ஆம் ஞாயிறு | 08 பிப்ரவரி 2026

மனித கடத்தலுக்கு எதிரான அனைத்துலக இறைவேண்டல் மற்றும் விழிப்புணர்வு தினம்

**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**
*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*

மாதாந்திர நோக்கம்:
திருஅவை: உள்ளடக்கிய தன்மையை வளர்த்தல்



# நீதிமான் நேர்மையானவர்களுக்கு இருளில் ஒளிரும் வெளிச்சம்

இன்றைய வாசகங்கள் அனைத்தும் குறிப்பாக ஒவ்வொரு தனிமனிதரிடமும் மற்றும் திருஅவைக்கும் முன்வைக்கப்படுகின்றன, ஒரு நீதிமான் தனது வாழ்க்கையை இயேசுவின் இதயத்துடன் இணைத்திருக்கும்போது, நேர்மையானவர்களுக்கு இருளில் ஒளிரும் வெளிச்சமாக இருக்கிறார். திருப்பாடல் ஆசிரியரும் இந்த நீதிமானைப் பற்றி சுருக்கமாக விவரிக்கிறார். கடந்த வாரம் நாம் தியானித்த மலைப்பொழிவு பேறுபெற்றோரின் குணநலன்களின்படி வாழும் ஒருவரைப்பற்றி இயேசு கூறியதை நாம் நினைவுகூருவோம்.